www.tamilarangam.net
தந்துதவியவர்:- பத்மநாப ஐயர்

# நம்நாடு

NAMNAADU

ஊர் 1: வீடு 1 கார்த்திகை 1990

பெற்ற தாயும் பிறந்த பொன்னாடும்
நற்றவ வானிலும் நனிசிறந்தனவே.

# இப்போர் இறுதிப்போர்!
# இதில் தோற்றால் இனம் இழப்போம்!

## விடுதலை வேட்கை போனால் தறிதலை ஆகிநிற்போம்

இலண்டனில் வாழ்கின்ற தமிழர் இன்று தமிழ் மண்ணில் நடக்கின்ற தமிழ் நசிப்புப் பற்றி என்ன நினைக்கிறார்கள் என்று தெரியவில்லை. ஏதோ மற்றவன் வீட்டில் நடக்கின்ற சமாச்சாரம் என்றாற் போல இலண்டன் தமிழர் அக்கறையில்லாமல் அனுதாபம் காட்டாமல் நடந்து கொள்வது கவலையைத் தருகின்றது. அக்கறையில்லாமல் இருப்பது மட்டுமல்லாமல் வீட்டு முன்புறத்தில் சவம் கிடக்க, வீட்டுக்குப் பின்புறத்தில் விருந்து கொண்டாடுவது போல, இங்கே படாடோபமான களியாட்டங்களில் ஈடுபட்டும் வருகின்றார்கள். தனிமனித உரிமைக்குத் தலையான மதிப்புக் கொடுக்கின்ற இந்த நாட்டில் வாழ்கின்ற தமிழரின் நடவடிக்கைபற்றித் தட்டிக் கேட்கவோ விமர்சிக்கவோ எவருக்கும் உரிமை இல்லை என்று சிலர் முணுமுணுக்கக் கூடும். ஆனால் நமக்கும் ஒரு கடமை உண்டு. அதை நாம் மறக்கலாமா? அதனாலேதான் இதனை எழுதுகிறோம்.

சிங்களவர் தமிழர் பிரச்சனையை எப்படி நினைக்கிறார்கள்? இந்தப் பிரச்சனையை அவர்கள் எப்படித் தீர்க்க நினைக்கிறார்கள்? மூக்கு இருக்கும் வரை சளி இருக்கும் என்ற உண்மையைச் சிங்களவர் ஒருபடியாகக் கண்டு பிடித்து விட்டார்கள். ஆகவே மூக்கை ஒழித்தால் ஒழிய மூக்குச் சளியை அழிக்க முடியாது என்ற முடிவுக்கு அவர்கள் வந்து விட்டார்கள். இந்த முடிவை அவர்கள் இனிமேல் மாற்றப்போவதில்லை. ஆகவே தமிழரை, இலங்கைத் தமிழர் அனைவரையும் கொன்றொழிப்பதுதான் தமிழர் பிரச்சனைக்குத் தீர்க்கமான ஒரு தீர்வு என்ற முடிவுக்குப் பிரேமதாசரும், கொப்பேக்கடுவரும் இரஞ்சன் விசெயரத்தினவும் வந்து விட்டார்கள். ஆகவே தமிழ், தமிழர் சம்பந்தப்பட்ட அனைத்தையும் அழித்துத் தமிழ் இடப்பிரதேசங்களைப் பாலைவனமாக்கச் சிங்களவர் கங்கணம் கட்டி நிற்கிறார்கள்.

இந்த நிலையில் இலங்கைக்கு வெளியே வாழ்கின்ற நாங்கள், அவர் பிழை, இது பிழை என்று குற்றமும் குறையும் கூறிக் கொண்டு சும்மா இருப்பது நியாயமா? வீடு நெருப்புப் பற்றி எரிந்து கொண்டிருக்கும் போது, நெருப்பை அணைப்பதற்கு உதவாமல் பிழை சரி பேசிப் பொழுதைப் போக்கலாமா?

இன்று தமிழ் மண்ணில் நடக்கும் போர் இறுதிப் போர். இப்போரில் தமிழர் தோற்றால் இனிமேல் வரும் எப்போரிலும் தமிழர் வெல்ல முடியாது. தமிழினமே இதை எண்ணுவாயா?

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# எம்மை இவர் பிரிப்பதோ? எம் நிலத்தை எரிப்பதோ?

எம்மைப்பிரித்து....ஒருவர் மீது மற்றவரை ஏவிவிட்டு.. எம்மை அழிக்கத் திட்டமிட்டுச் செயற்பட்டு வருகின்றது சிங்கள அரசு!
தமிழ் முஸ்லிம் மக்களையும், ஏனைய தமிழரையும் பிளவுபடுத்தி, அப்பிளவின் அடிப்படையில், ஓர் இரத்தக்களரியை ஏற்படுத்தும்
நடவடிக்கையில் மிகவும் மும்முரமாக ஈடுபட்டுள்ளது சிறீலங்காவின் இனவாத அரசு.
சிங்கள இராணுவத்தின் கட்டுப்பாடற்ற நடவடிக்கைகளினாலும், சிங்களக் காடையர்களின் அக்கிரமத் தாக்குதல்களினாலும் உலக அபிப்பிராயத்தை இழந்து நின்ற சிங்கள அரசு, உலகின் நல்லெண்ணத்தை மீண்டும் கைப்பற்றிக் கொள்ளும் நோக்குடன், தனது தந்திரங்களைக் கையாண்டு வருகின்றது!


*அனைத்துலக நாடுகளிற் பொதுவாகவும் அராபிய-இஸ்லாமிய நாடுகளிற் குறிப்பாகவும், தமிழின சங்காரத்தில் தனது இராணுவ நடவடிக்கைகளை நியாயப்படுத்தவும், தனது ஆயுதபலத்தையும், செல்வாக்கையும் விரிவு படுத்தவும், சிங்கள அரசும் அதனது கூலிப்படைகளும் துணிந்து நிற்பதைத் தமிழ் மக்கள் பூரணமாகப் புரிந்து கொள்ளுதல் அவசியமாகும்! இரசாயனக் குண்டுகளை வேற்று நாடுகளிலிருந்து பெற்று அவற்றை எங்கள் மக்கள் மீது பிரயோகிப்பதே சிங்கள அரசின் முக்கிய நடவடிக்கையாகும்.*

பச்சைப்படியான இனக்கொலைக்குத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கும் சிறிலங்காவின் சிங்கள அரசாங்கம் தன்னைச் சுற்றித் தமிழ்பேசும் கைக்கூலிகளைப் பக்கபலமாக வைத்துச் செயற்படுகின்றது.

# தமிழீழத்தைத் துண்டாடும் திட்டங்கள்.......

கிழக்கு மாகாணத்தைத் தமிழரிடமிருந்து பிரித்துவிடும் விஷநோக்கின் உச்சக்கட்டத்தையே நாம் அண்மைக் காலங்களில் பார்த்திருக்கிறோம்! வடக்குக்கிழக்கு மாகாணத் தமிழ் மக்களுக்குள் ஏதாவது வகையிற்பிளவுகளைப் பலப்படுத்தலாம் என்று கனவுகண்டு வந்த சிங்களப்பௌத்த இனவாதம் தனது நடவடிக்கைகட்கு புது வடிவங்களைத்தரும் யுக்திகளைக் கையாண்டு வருகிறது.

**தமிழீழம்** என்ற வரைவிலக்கணத்தைச் சுக்கு நூறாக்கும்முயற்சி சிங்கள அரசியலுக்குப் புதிதல்ல. 1983இல் மகாவலி அமைச்சிலிருந்த பண்டிதரத்தின, காமினிதிஸநாயக்க, மலிங்கஹேர்மன் குணரத்தின ஆகியோர் உட்பட 40 பேர் குடியேற்றத் திட்டங்கள் எனும் போர்வையில் எடுத்த இரகசிய நடவடிக்கைகளை நாம்மறந்து விடக்கூடாது. மன்னார், திருகோணமலை, மட்டக்களப்புப் பகுதிகளைப் பிரிக்கும்நோக்குடன் மல்வத்துஓயா, யான்ஓயா, மதுறுஓயா என்று சிங்களப் பெயரிடப்பட்ட ஆறுகள் சார்ந்த பகுதிகளில், தமிழர் உரிமைகளை எதிர்த்து இனக்கலவரங்களில் ஈடுபட்ட காடையர்களைக் குடியேற்றுவதில், மகாவலி அமைச்சின் உறுப்பினர்கள் மிக அக்கறை செலுத்தி வந்தனர்! 45,000 இற்கும் மேற்பட்ட, நிலப்பசி பிடித்த வெறியர்களை, மதுறு ஓயாப் பகுதியிற் குடியேற்றியும் வைத்தனர்! பதவியாக் குடியேற்றத் திட்டத்தின் குடியேறிகளின் அடுத்த சந்ததியினர் வெலிஓயப் பகுதியிற் குடியேற்றப்பட்டனர். இவர்களுக்குப் பயிற்சியளித்து இவர்க்கு ஆயுதம் வழங்கும் கைங்கரியத்தில் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனாவின் மைந்தன் ரவியே முன்னின்றார் என்பது குறிப்பிடத்தக்கது!





— விடுதலைப் புலிகள் — *எம்மால் நிச்சயம் முடியும்! இன்னொரு கரம் தாருங்கள்!*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருகோணமலையை ஒரு வர்த்தக மையமாக்கி அதனைச் சுற்றி ஒரு மிகப் பெரிய குடியேற்றத்தினை உருவாக்கவும் திட்டங்கள் வகுக்கப்பட்டன!

கடற்படைப் பயிற்சித் தளம், மீன்பிடித் தொழில் நிலையம் என்ற இன்னோரன்ன அமைப்புக்கள் மூலம், திருக்கோணமலையைச் சிங்கள இனவெறிக்கு அடிமைப்படுத்த முயன்றனர், மகாவலி அமைச்சின் சூத்திரதாரிகள்.

இவரது இத்திட்டங்களை முறியடிப்பதில், எமது விடுதலைப் போராளிகள் கண்ணுங்கருத்துமாயிருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது!

படிப்படியாக வகுக்கப்பட்ட திட்டங்களின் மூலம், தமிழரின் பிரதேசங்களைப் பறித்தெடுத்து, வடக்குக் கிழக்கு மாகாணங்களிலும், அவற்றைச் சுற்றியும், ஆயுதமேந்திய சிங்களக் காடையர்களைக் குடியேற்றுவதிலேயே சிங்கள இனவெறியர்கள் கவனஞ் செலுத்தி வந்தனர்!

இது இயலாமற் போன காரணத்தாலேயே, இவர்கள் தற்போது தமிழ்-முஸ்லிம்களைத் தமது நோக்கத்திற்குப் பயன்படுத்த முன்வந்துள்ளனர். வடக்குக் கிழக்கின் தொடர்பினைத் துண்டிக்க, முஸ்லிம் மக்களைப் பகடைக்காய்களாக உபயோகிக்க நிற்கின்றனர்!

சிங்கள அரசின் இந்த விஷநோக்கினைத் தமிழ்-முஸ்லிம் மக்கள் புரிந்து கொள்ளுதல் வேண்டும்! தமிழரிடையே பிறந்த துரோகக்கும்பல்களை ஏவி முஸ்லிம் மக்கள் மீது தாக்குதல்களை நடத்தியுள்ளனர்!

## தமிழர்களுக்கென ஊர்காவற்படைகள்

தற்போது தமிழ் முஸ்லிம் மக்களின் தாக்குதல்களிலிருந்து ஏனைய தமிழ்மக்களைப் பாதுகாப்பதற்காக கிழக்குமாகாணத்தில் தமிழர்களுக்கென ஊர்காவற்படைகளை உருவாக்கும் ஒரு பயங்கரமான திட்டம் முளைவிடத் தொடங்கியுள்ளது.

சிறிலங்காவின் சிங்கள அரசாங்கம்... தனது தமிழின ஒழிப்புத் திட்டத்தை, நிறைவேற்ற எடுத்துள்ள மகத்தான மார்க்கங்களுள், இதுவே தலைசிறந்ததெனலாம். தமிழ் மக்களுக்கு ஆயுதமளித்துப், பயிற்சியும் தருவதாக இத்திட்டம் கூறுகிறது.

இவ்வாறான ஒரு திட்டத்தின் மூலம், தமிழர்கள் நலனடைவார்களென நம்பு பவர்கள், மிகவும் பலத்த ஏமாற்றத்திற்கும், விரக்திக்கும் ஆளாவார்கள்.



எம் கை..... தளிர்க்க
தம் கை தந்துள்ள தங்கைகள்!

ஊர்காவற்படைகளாக யார் உருவெடுப்பார்கள் என்பதையும், எப்படியான, ஒரு நிலைமை, இப்படைகள் மூலம் உருவாகுமென்பதையும், அவரவர் கற்பனைக்கும், அனுபவத்திற்கும் விட்டுவைக்கிறோம்.

சிங்கள அரசின் 'அழிவு-இயந்திரம்', தமிழீழத்தின் எல்லைக்குள், தமிழரின் ஆசியுடன், தமிழர் வடிவிலேயே நுழைவதற்கு, இந்த ஊர்காவற் படைகளின் தோற்றம் வாய்ப்பளிக்கு மென்பதில் எதுவித..... ஐயப்பாடும் இருக்கமுடியாது!

## தமிழீழ விடுதலைப் போராட்டத்தின் ஆணிவேரைத்தேடி.....

இன்று எமது விடுதலைப் போராட்டத்தின் ஆணிவேரைத் தேடிச் சிங்கள வெறியர்கள் துளைத்துக் செல்கிறார்கள். சிங்கள இன வெறியின் யுக்திகளுக்கு, எமது மக்கள் பலியாகக் கூடாது.

அறியாமைக்குள் எம்மைத் தள்ளி ஒருவருடன் ஒருவரை மோதவிட்டு, எமது தேசிய வரலாற்றுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் இந்தக் கீழ்த்தரமான யுக்திகள், எமக்குப் புதியவையல்ல என நாம் ரஞ்சன் விஜேரத்தினாவின் படைகளுக்கு வெளிப்படுத்தியே ஆகவேண்டும்!

தமிழின ஒழிப்பில், தமிழர் பலவீனங்களே சிங்கள அரசின் ஆயுதமாகப் பயன்பட முடியும்.

## நாம் விழித்துக் கொள்ள மறுத்தால்.

நமது, மொழியும், இனமும், சிங்கள இன வெறியினால் நிர்மூலமாக்கப்படுவதை, இந்த உலகம் பார்க்க நேருமென்பதை நாம் நினைவில் வைத்திருக்கவேண்டும்.

தமிழ்-முஸ்லிம் மக்களைத் தம் வசப்படுத்தித் 'தமிழீழம்' என்ற இலட்சியக் கோட்டையைத் தகர்த்து விடலாமென நம்பியிருக்கும் சிங்கள ஏகாதிபத்தியம், நாளை, தமிழ்-முஸ்லிம் மக்களைத் தமக்கு அடிமைகளாக்குவது மட்டுமன்றி. நிலமற்றவர்களாகவும் மாற்றி வைக்குமென்பதை..... ஈழத்தமிழர் புரிந்திடத் தவறக்கூடாது!

www.tamilarangam.net

# தலைவனின் தரிசனம்

களத்தின்.....தலைவன்.....
என் கனவிலே
வந்தான்!
'தலைவா!" என்று.....
கூவியழைத்தவன்.....
அருகிலே சென்றேன்!

மின்னும்.....கண்ணிலே.....
தீர்க்கம்!
காவியம்.....படைத்த.....
நாயகனல்லவா.....அவன்!
தலைவனுக்குரிய.....
பண்புகள்யாவும்.....
நிலைகொண்ட......
உருவம்!
அதனாற்றானே.....
அவன்.....
தலைவனானான்!

'தனித்தேன் நிற்கிறாய்?
தலைவா' என்றேன்?
'எங்கே.....உனது.....
படைகள்?" என்றேன்!
நெஞ்சைப் பிளந்தான்!
அந்த நெஞ்சுக்குள்.....
ஆயிரமாயிரம்.....
வேங்கையர் நின்றார்!
கொஞ்சும் மங்கையர்
கூட......
அங்கே.....
பொங்கும்
வீரத்தோளுடன்
நின்றார்!
மாலையேந்தும்
தோள்களிற்
துவக்குகள் கண்டேன்!

நூலையேந்திட
வேண்டிய.....கரங்களில்.....
இளம்பிள்ளைகள்.....
ஆயுதப் போரினை.....
நெஞ்சிலேந்தி.....
நடந்திடக்கண்டேன்!

ஆசையாய்த்.....
'தம்பி!" என்றேன்!
என் தலைவனைத்.....
தம்பி என்பதில்.....
எத்தனை ஆனந்தம்!



தம்பி! போரில்.....
யாருக்கு வெற்றி?
என்று நான்
கேட்டேன்!
அவனது முகத்தினில்.....
ஆழக்கடலின்
முத்துக்கள் தோன்றிக்.....
கணத்தில் மறைந்தன!

'ஆமாம்! வெற்றி.....
நமக்கே!"
பதிலையும் நானே கூறி
முடித்தேன்!

ஆயுத பலந்தான்
எப்படி! என்றேன்!
கூரிய விழிகளால்.....
என்னைக் குத்தினான்!
பாரிய நெஞ்சினை.....
ஒருமுறை.....
நீவிக் கொண்டனன்!

நெஞ்சின் துணிவே.....
துணையென்றானோ?
என்று என்னை.....
நானே கேட்டேன்!
ஆயுதத்தைக்.....
கையளித்தால்.....
தீர்வு நமக்குப்
பிறக்குமோ?
என்று.....
கேட்கப்போனவன்
நாவையடக்கினேன்!

சாயும் இனத்தின்
சாவை நிறுத்தும்.....
காவிய நாயகன்.....
என்னைப் புரிந்தவன்
போல.....
'உடனடியாக.....
ஆயுதம் தேவை....
அனுப்பிவை!"
என்று....
நாவசைத் துரைத்து....
வாயுவைப்போல.....
ஓடி மறைந்தான்!
கனவிலும் ஓயாத.....
காரிய வேங்கையின்
முன்.....
கேள்வி கேட்டுப்
பெருமையடையும்
நானும்
ஒரு பிறவியோ?
கனவிலிருந்து.....
விழித்துக்கொண்டேன்
ஆயுதத்திற்கு.....
நிதி திரட்ட!

www.tamilarangam.net

# செய்தியும் பின்னணியும்

> தமிழ் மக்கள் எங்களுடன் நிற்கிறார்கள்!
> புலிகளைத்தான்... நாம் கொன்று தீர்க்கின்றோம்!
>
> - ரஞ்சன்

## செய்தி 1

ஒன்பது லட்சம் மக்களை... இடம் பெயர்ப்பதன் மூலம், தனது இராணுவ நடவடிக்கைகளுக்குப் புதுப்பலம் தேடுகிறது... அரசு!.

உலக நாடுகளிற்குத்..தன்னை நியாயப்படுத்த... ரஞ்சன் விஜேரத்தினாவின் தலைமையிலான, சிங்களப் பௌத்த இனவெறி.... முழுமூச்சுடன் இயங்கி வருகிறது. நாற்பதாண்டுகளாகப் பல நிலையில், எண்ண முடியாத.... இழப்புகளின் மத்தியில்...., எமது தமிழினம், எடுத்து வந்த விடுதலைப் போராட்டத்தினை, இன்றும், ஒரு பயங்கரவாத நடவடிக்கையென்று உலகிற்கு எடுத்துக் காட்டவே...., தமிழ் மக்களிலிருந்து, அவர்களின் ஒரே நம்பிக்கையான விடுதலைப்புலிகளைத் தனித்துப்பிடிக்கத் தவியாய்த் தவிக்கிறது, சிறிலங்காவின் சிங்களப் பெரும்பான்மை. ஆத்மீகரீதியாகத் தமிழ் மக்களின் விடுதலைப் பலத்தை அளவிடும் ஒரு விஷப்பரீட்சையில், சிறிலங்காவின் அரசு முனைந்துள்ளது.

தமிழரசியலில் ஆயுதப்போராட்டத்தின் பரிணாம வளர்ச்சியின் நியாயத்தைப்.... புரிந்தும், புரியாததுபோல் நடித்துக் கொண்டிருக்கிறது கொழும்பரசு. **"WAR AGAINST TIGERS, NOT AGAINST TAMILS"** என்ற பிரச்சாரத்தினை எடுத்துச் செல்கின்றன சிங்கள ஊடகங்கள்.

சுய நிர்ணய உரிமைகள் பற்றிய எதுவித தீர்க்கமான முடிவுகளையும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும், சிறிலங்காவின் சிங்கள அரசு .... வைத்திருந்ததாக, வரலாற்றில் இல்லை.

இந்திய வெளியேற்றத்தில், தனது திட்டத்தை நிறைவேற்றவும் தமிழின ஒழிப்புக்கான தனது ஆயுத, ஆத்மீக பலத்தைக்கட்டியெழுப்பவுமே விடுதலைப்புலிகளை, இவர்கள் பயன்படுத்த முனைந்தார்கள் என்பதை, விடுதலைப்புலிகளின் அரசியலமைப்பு ஆரம்பத்திலிருந்தே அறிந்து வைத்திருந்துள்ளது. எனினும், இந்திய இராணுவ நடவடிக்கைகளிலிருந்து.... தமிழ் மக்களிற்கு ஒரு விடிவினை, அது ஒரு தற்காலிகமென்ற போதுங்கூட, ஏற்படுத்தவும், சிங்கள இனவாத வெறியின் மனோபலத்தினைக் கிட்ட இருந்து பார்க்கவுமே இந்த இடைக்காலப் பேச்சு வார்த்தைகளை எமது புலிகள் பயன்படுத்தினர் என எண்ணத் தூண்டுகின்றது.

ஆண்டுக்கு ஆண்டு, தேதிக்கு தேதி... எமது தமிழ் நிலத்தில் ஏற்பட்டு வந்த இனக்கலவரங்களின் கூட்டு மொத்தமாகவும், ஸ்ரீ லங்காவிலிருந்து முழுத்தமிழினத்தினைத்தினையும் மூட்டை கட்டியேற்ற வேண்டுமென்ற புத்த பிக்குகளின் அபிலாசைகளை நிறைவேற்று முகமாகவும், ரஞ்சன் விஜேரத்தினாவின் வாயிலிருந்து... இந்தக் கொடியவார்த்தைகள் வெளிவந்துள்ளன.

கடல், தரை, விமான மார்க்கமான குண்டுவீச்சுக்களின் தாக்குதல்களைச் செய்து வரும், ரஞ்சனின் அரக்கப்படைகள், எமது பொது மக்களைக் கொன்று தீர்த்துக் கொண்டிருக்கின்றன.

இவ்வாறான ஒரு சூழ்நிலையில் தமிழ் மக்களின், விடுதலை வேட்கையை அளவிட்டுப் பார்க்கவே இக் கொடிய திட்டத்தை வெளியிட்டிருக்கிறது, ரஞ்சனின் இராணுவமூளை! எமது மக்கள், ரஞ்சனின் மூர்க்கத்தனமான முடிவுக்கு இணைய மறுத்துள்ளனர்.

எமது உயிர், உணவு உடைமைகள் அத்தனையும் சிறிலங்காவின் கொடிய அரசின் விஷப் பற்களுக்கு இரையாகலாமென்ற சூழலில் இருந்துங்கூட, எமது புலிகளுடன் இணைந்து நிற்கும் தமிழ்பொது மக்களின் தியாக உணர்விற்கு... மதிப்பளிக்க... உலகத் தமிழினம் திரண்டிட வேண்டும்.

விடுதலைப் போராட்டத்தைப் பொறுத்தவரை எமக்கு முன்.... இரு பெருங்கடமைகள் காத்திருக்கின்றன.

### முதலாவது....

விடுதலைப்புலிகளின் ஆயுத பலத்திற்கு.... நாம் பெருமளவில் ஆதரவு நல்க வேண்டும். சிறீ லங்கா அரசிற்கு உலக நாடுகள் எல்லாம் கரங் கொடுக்க முடியும். ஆனால்... எமக்கு நாமே பலமாக இருக்கும் ஒரு நிலமை இருப்பதை நாம் சிந்திக்க மறக்கக் கூடாது.

### இரண்டாவது...

எமது நிலத்திற்கு பேரழிவு ஏற்படாமலிருக்கவும் சிங்கள இராணுவத் தாக்குகளிலிருந்து தப்பி... ஒரு விடுதலைப் போராட்டத்தின் பக்கவிளைவுகளை... எமது மக்கள் தாங்குவதற்குரிய பாதுகாப்பினை வழங்கவும் நாம் அயராது உழைத்தல் வேண்டும்.

### இது ஓர் இனமானப் போர்!

இதன் இறுதி வெற்றியை எமது இனம் அனுபவிக்க வேண்டும். இதுவே எமது தீராத அவாவாகும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# செய்தி.2 [redacted]

## சிங்களத் தேசியப் பாதுகாப்பு

தமிழினத்திற்கு எதிராக யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் சிங்களப் படைகளுக்குப்... பலத்த ஆதரவு தருவதில்... சிங்களத் தேசிய வெறி.. கட்டவிழ்த்துவிடப்பட்டுள்ளது.

சிறீலங்கா அரசின் சனாதிபதி பிரேமதாசாவும் அவரது பாரியாரும் அந்த முயற்சியில் முன்னிற்கின்றனர்.

அண்மையில் பலாலி இராணுவ முகாமிற்கு விஜயஞ் செய்து, அங்கு நிலை நிறுத்தப்பட்டுள்ள இராணுவத்தினருக்குப் பரிசளித்து ஊக்கமளித்துள்ளார் திருமதி பிரேமதாசா அவர்கள். சிங்களத் தேசியப் பாதுகாப்பு நிதித்திட்டம் சிறீலங்காவில் பரவலாக்கப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் சிங்கள மக்கள் தேசியப் பாதுகாப்புநிதி நோக்கித் தமது ஊதியத்திற் பெரும் பகுதியைத் தந்து வருகின்றனர்.

சிறீலங்கா அரசின் பலத்த ஆதரவுடன் லண்டனில் வெளியாகும் silvarrow தமிழின ஒழிப்பினை நியாயப்படுத்தும் வேலையில் மிகவும் மும்முரமாக ஈடுபடுத்தப்பட்டுள்ளது. வெளிநாடுகளில் வாழும் சிங்களமக்களின் தேசிய வெறியினைத் தூண்டுவதுடன் இனத்துவேஷத்திற்குத் தூபமிட்டு வரும் இப் பத்திரிகை வெளிநாடுகளில் வாழும் தமிழர்களின் மனோபலத்தினைத் தரைமட்டமாக்குவதையும் தனது குறிக்கோளாகக் கொண்டுள்ளது.

விடுதலைப்புலிகளின் தலைவர் பற்றிய பொய் வதந்திகளைப் பரப்பி வருவதிலும் சிங்கள அரசு மிகக் கவனஞ் செலுத்தி வருகிறது. எமது நாட் டில் சிங்கள அரசின் ஊர்காவற் படைகள், எமது இனத்தைப் பூண்டோடழிக்க உருவாக்கப்பட்ட திட்டங்களின் தலையாய படைப்புக்கள் .... என்பதை.... நாம் மறந்து விடக்கூடாது.


# செய்தி3 [redacted]

## தமிழ்த்தேசியம்

உலகத் தமிழ் மக்களின் தேசிய உணர்வு, பொங்கியெழுமாயின், எமது விடுதலை வேட்கையினைத் தகர்க்க, எதுவித சக்திகளாலும் முடியாதென்பதை நாம் எல்லோரும் அறிவோம்.

உலகு பரந்து வாழும் இனமான மட்டுமன்றி, கல்வி, நிதி, வசதிகள் படைத்த ஒரு வர்க்கமாகவும் வெளிநாடுகளில் எமது இனம் வளர்ந்து நிற்கின்றது. எனினும் எமது தேசியப் பாதுகாப்பினை நோக்கிய எமது செயற்பாடுகள் மட்டுமல்ல, எமது சிந்தனைகளும் வற்றிக்கிடக்கின்றன.

கலை, கலாச்சாரப்பண்பாட்டு விவகாரங்களிலும், பக்தி மார்க்கங்களிலும், சொந்த முன்னேற்றங்களிலும், நம்மவர்களின் ஈடுபாடுகள், போற்றத்தக்கவையே எனினும் எமது இனம், மொழி, நிலத்தின் பாதுகாப்புப்பற்றிய தீர்க்கதரிசனம் நம்மவரிடம் காணப்படுவதாகத் தெரியவில்லை.



இவர்கள் கையில் ஆயுதம்!
எங்கள் கையில் ஆயிரம்!

தற்போது, நமது தாய் மண்ணில் நடைபெற்றுவரும் நிகழ்ச்சிகளை மிகவும் குறுகிய கண்ணோட்டத்துடன் நோக்கி வருபவர்களும், 'இது நமது பிரச்சனையல்ல' என்று நினைத்துத் தத்தம்பாட்டை பார்த்துக் கொள்பவர்களுமே.... நம்மிடைமலிந்து கிடப்பது போன்று ஒரு பிரேமையேற்படுகிறது.

'யாருக்காக இந்தப் போராட்டம்?' இது ஒரு சிலரது கேள்வி. 'எதற்காக இந்தப் போராட்டம்?' இது இன்னொரு சிலரது கேள்வி.

இந்தப்போராட்டத்தை யார் தொடக்கிவைத்தார்கள்? இதுவும் ஒரு கேள்வி?

'ஏன் தொடக்கி வைத்தார்கள்?'

முதற்கேள்வியைத்தொடர்ந்து வரும் அடுத்த கேள்வி!

கேள்வி கேட்பதுவே தமிழ்த் தேசிய பாதுகாப்போ? என்று சிந்திக்கத் தூண்டுகிறது.

ஒரு பயங்கரமான காலகட்டத்தில் எமது விடுதலைப் பயணம் நடைபோட்டுக் கொண்டிருக்கிறது.

விடுதலைப்புலிகள் வெல்லுவது, தோற்பதல்ல தமிழரின் பிரச்சனை. வெற்றிக்கும் தோல்விக்கும் பின்னால் உள்ள அர்த்தமே எமது முக்கிய பிரச்சனை.

இந்தப்போராட்டத்தில் எமது இனம் விட்டுக்கொடுத்தால் அடுத்த சந்ததியின் நிலை என்னாவது? இந்தப்போராட்டத்தில் எமது இனம் அழிந்து விடுமோ என்ற அச்சம் தலைதுக்க, வேதனையோடும் விரக்தியோடும் எமது போராட்டச் செய்திகளில் வடியும் குருதியைப்பார்க்க முடியாமற் கண்களை மூடி, எழும் கூச்சல்களையும் ஒலங்களையும் கேட்க முடியாமற் காதுகளை மூடி.....முனகினாலும் தலைபோய்விடக்கூடும் என்று வாயையும் பொத்தி வழி நடப்பவரையும் நாம் சந்திக்காமல் இல்லை. எம்மைப் பொறுத்தவரை, இதுவே தமிழனது வரலாற்றின் திருப்புமுனை! எவனாவது ஒரு தமிழன், தனது நிலத்துக்காக மொழிக்காக இனத்துக்காகத் தனது கரங்களை உயர்த்த வேண்டும் என்ற ஆசையும், உணர்வும், உள்ளவனாக இருப்பானாயின், அந்தத் தமிழன் இந்தச் சந்தரப்பத்தை ஒருபோதும் தவறவிடமாட்டான்.

www.tamilarangam.net

தமிழ்த்தேசியத்திற்கு விடப்படுள்ள இந்தச்சவாலை, ஒவ்வொரு தமிழனும் ஏற்றிட வேண்டும். எமது தேசியப்பாதுகாப்பில் .... எம்மால் இயன்றவரை எமது எல்லைக்கு எட்டியவரை, எமது பங்களிப்பினைத்தர நாம் முன்வரவேண்டும்.

இந்த உலகில் எந்த இனத்தை எடுத்தாலும் அதன் தேசியத்தைப்பாதுகாக்க அதன் மனித உரிமைகளுக்காகப் போராட.... அரசுகளும், அந்த அரசுகளின் தேசியப்படைகளும் உண்டு.

எல்லா இனங்களும் தமது உரிமைகளைப் பாதுகாக்க அனுமதிக்கப் படுகின்றன. ஆனால் தமிழன் மட்டும், தன்னைத் 'தமிழன்' என்று கூறுவது பயங்கரவாதம் என்று இந்த உலகசனநாயகம் உளறுகிறது.

இந்திய அரசிடம் தூதுபோயுள்ள சிறீலங்காவின் வெளிவிவகார மந்திரி பெர்னாட் திலகரட்ண இந்திய அரசிற்கு நன்றி தெரிவித்துள்ளாராம். எதற்காக? இலங்கைத் தமிழர் பிரச்சனையில் இனி எவ்வித குறுக்கீடும் செய்வதில்லை என்ற உத்தரவாத்தை இந்திய அரசு இவருக்கு அளித்துள்ளதாம்.

உலகசெய்தி நிறுவனங்களில் எத்தனை, எங்கள் விடுதலைப் போராட்டத்தை நியாயப்படுத்தி வருகின்றன? எமது விடுதலைத்தாகத்தைப் புரிந்து கொள்ளும் ஊடகங்களை விரல்விட்டெண்ணலாம். எமது போராட்டத்தில் எமக்குத் துணை செல்ல, எத்தனை வல்லரசுகள் காத்திருக்கின்றன?

எம்மையும் எமது விடுதலைப்போராளிகளையும் தனிக்கப்பிடித்துச் சுற்றி வளைத்துச் சூரசங்காரஞ் செய்ய.... இந்த உலகின் பெரும் பகுதி காத்துக்கிடக்கிறது.

இந்த நிலையில் நாம் கேள்விகள் கேட்பதோடு தேசியத்தைப் புதைத்துக்கொண்டு விழாக்களும் பூசைகளும் நடத்திக்கொண்டலைகிறோம்.

'அ...ஆ...இ...ஈ....' சொல்லிக்கொடுப்பதுடன் எமது தமிழ்த் தேசியம் பாதுகாக்கப்படப்போவதில்லை.

'தாம்தித்தாவுடன்' எமது எதிர்காலச் சந்ததி உயிர்பெற்று விடப்போவதில்லை.

வெளிநாடுகளில்.....
மெல்லத்தமிழினம் செத்திடும்.
நாம் விழித்துக் கொள்ளாவிட்டால்.
பத்துப்பதினைந்து வருடங்கள் கூட அதிகமெனலாம்

## தமிழ் தேசியப் பாதுகாப்பு.

தமிழரின் நம்பிக்கை கீற்றுகள் தமிழீழ விடுதலைப்புலிகள்! உலகத் தமிழினத்தின் இனமான படை தமிழீழ விடுதலைப்புலிகள்!

புலிகளின் கரங்களைப்பலப்படுத்துவதன் மூலமே தமிழினத்தின் எதிர்காலத்தை நிச்சயப்படுத்தமுடியும்.

தமிழினம் ஒரு பலமான நிலையில் இருக்கும் போதுதான் எமக்குச் சார்பான எமது மொழி நிலம் சாரந்த உரிமைகள் குறித்த எதுவிதமான தீர்வும் எமக்குக் கிடைக்க முடியும். பலமிழந்து அஞ்சிக்கெஞ்சும் நிலையில் நாம் இருக்கும்வரை சிங்கள பௌத்த பெரும் பான்மை நமக்கும், நமது தேசிய வெளிபாடுகளுக்கும் மதிப்புத்தரமாட்டாது. மனிதாபிமானமற்ற முறையில் மனித வேட்டையாடும் கீழ்த்தரமான ஓர் அரசின் கீழ், மனிததர்மம் பற்றிய அடிப்படை புரிந்துணர்வு எதுவுமற்ற இனமத வெறியர்களின் முன் பாராளுமன்ற அரசியலில் கூட எமது இனத்திற்கான தேசியப் பாதுகாப்புப்படை இருத்தல் வேண்டும்.

தமிழ் மக்கள் ஒதுங்கக்கூட ஒரு பாதுகாப்பான பகுதியின்றிப் பகிரங்கமாக ஓரினக் கொலையில் ஈடுபட்டுள்ளது சிங்கள அரசு!

ஆலயங்கள்..... பள்ளிவாசல்கள் திருச்சபைகள் மட்டுமா? பள்ளிக்கூடங்கள், வாசிகசாலைகள், பொதுக் கட்டடங்கள் மட்டுமல்ல, மருத்துவமனைகள் ஆஸ்பத்திரிகள் அனைத்தையும் தூள் தூளாக்கிக் கொண்டிருக்கும்.... இதயமற்ற இந்தக்கொடிய அரசு.... எங்கள் இனம் குருதிவடிய வடிய.... நாதியற்று அணைப்பாரின்றிக் கேட்பாரின்றிச் சீவனைவிட வேண்டுமென எதிர்பார்த்துக் கங்கணம்கட்டி நிற்கின்றது.

சிங்கள ஆக்கிரமிப்பாளரின் ஆகாயமார்க்கமான தாக்குதல்களை முறியடித்து இனப் பேரழிவினைத்தடுக்க எமது புலிகளின் ஆயுதபலத்தைப் பெருக்குவோம்.

### புலிகளின் ஆயுதக்கையளிப்பு தமிழினத்தின் தற்கொலைமுயற்சிக்கு ஒப்பானதாகும்.

## விடுதலைப்புலிகள் நிராயுதபாணிகளானால்......

சிங்களப்பயங்கரவாத அரசு.. எங்கள் விடுதலைப்புலிகளின் கரங்களிலுள்ள ஆயுதத்தைப் பறித்தபின்னர், எமக்கு அரசியற்தீர்வு அளிக்குமென..... நாம் எதிர்பார்க்கிறோமா? இன்றாவது, தமிழினம், உலகிலேயே ஒருபுராதன இனமென்பதை நிறுவவேண்டாமா?

சிங்கள இனம் தமிழின அழிவை நோக்கி எல்லாவகையிலும் ஒரு முனையிற் திரண்டுநிற்பதை.... நாம் அறியக்கூடியதாயுள்ளது.

சிங்களக் கட்சிகளும் சிங்களவர் மத்தியிலுள்ள பல்வேறுபட்ட இயக்கங்கள் தனியார் நிறுவனங்கள் தனிமனிதர்கள் அனைவரும் இது விடயத்தில் மிகவும் தீவிரமான முறையிற் தயார்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழின ஒழிப்பின் தளபதி ரஞ்சன் விஜேரத்தின அண்மையிற் பாராளுமன்றத்திலும் பத்திரிகை மகாநாடுகளிலும் தெரிவித்துவரும் செய்திகள் எதுவிதத்திலும் தமிழர் நலன் கருதுவதாகவோ அல்லேல் ஈழத்தமிழ் மக்களுக்குப் பாதுகாப்பளிப்பதாகவோ தெரியவில்லை. [பக்கம் 9]

www.tamilarangam.net

## செய்தி4

# மனித உரிமை மீறல்கள்

நிராயுதபாணிகளாக நம் மக்கள் கொலைசெய்யப்படுகிறார்கள்! சித்திரவதைசெய்யப் படுகிறார்கள்! எரிக்கப்படுகிறார்கள்! வெட்டப்படுகிறார்கள்! சிறைவைக்கப்படுகிறார்கள்! எரிகுண்டு, இரசாயனக்குண்டு வீச்சுகளுக்கு இரையாகிறார்கள்! தமிழ்நிலங்களில் மனித இறைச்சித் துண்டங்கள்.... மிருகங்களுக்கு உணவர்க்கப்படுகின்றன.

மிருக விடுதலையையும் மிருகப் பாதுகாப்பையும் பற்றி ஆர்ப்பாட்டங்களும் எதிர்ப்பு ஊர்வலங்களும் நடந்துவரும் ஒரு காலகட்டத்தில் நிராயுதபாணிகளான குடிமக்களை தனது பலத்த.... தாக்குதல்களுக்கு உட்படுத்தி மனித வேட்டையாடி வருகிறது... சிறீலங்காவின் சிங்கள பௌத்த ஆட்சிபீடம்.


இது குறித்து மனித உரிமை இயக்கங்கள் ஆட்சேபனையும் கவலையும் தெரிவித்துவருவதாகச் செய்திகள் காற்றில் அடிபடுகின்றன.

ஆனால் இந்தக்கொடுமைக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்கச் சிங்கள அரசு முயற்சி எடுப்பதற்கான அறிகுறி எதுவுமில்லை. மாறாகத் தனது அரக்கத்தனத்தை அசுர வேகத்துடன விரிவுபடுத்திவருகிறது.... சிங்கள அரசு!

கடந்த மூன்று மாதங்களுக்குள் உயிரிழந்த காயமடைந்த இடம் பெயர்ந்த மக்களின் எண்ணிக்கை மனித நாகரீகத்திற்கே சவாலாக அமைந்துள்ளது!

உணவு கிடைப்பதையோ மற்றும் வைத்திய வசதிகள் கிடைப்பதையோ எதுவிதத்திலும் சிங்கள அரசு ஆதரிப்பதாகத் தெரியவில்லை. வெளியிலிருந்து எவ்வித உதவியும் எட்டாதவகையில் தனது கீழ்த்தரமான பிரசாரங்களைச் செய்து வருகிறது சிங்களப் பெரும்பான்மை அரசு.

தட்டிக்கேட்பதற்கு ஆள் இல்லை என்ற ஒரு போக்கு சிறீலங்காவில் காணப்படுகிறது. அகதி முகாம்களை நடத்த முடியாத அவல நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் அகதிகளாக இந்தியாவிற்கும் ஏனைய நாடுகளிற்கும் ஓடுவதைத்தவிர வேறெந்த வகையிலும் தாக்குப்பிடிக்க முடியாதெனும் நிலை உருவாகியுள்ளது.



மக்கள் தன்மானத்தோடு பிறந்த நிலத்தில் தமது சுற்றம் உறவுகளோடு உரிமைகளோடு வாழ விரும்பும் ஒரே காரணத்துக்காகச் சிங்களப் பகைவனின் குண்டு வீச்சுகளுக்கு ஆளாகியுள்ளார்கள்!

தமது தேசத்தை அந்நிய ஏகாதிபத்தியத்திலிருந்து இராணுவ ஆக்கிரமிப்பிலிருந்து விடுவித்துக் கொள்ளவும் தமது எதிர்காலச் சந்ததியினரை சுயமரியாதையுடனும் சுதந்திரத்துடனும் வாழவைக்கவும் எமது மக்கள் திடசங்கற்பத்தோடும் தீர்க்கதரிசனத்தோடும் போராளிகளோடிணைந்து பலத்த இழப்புக்களையும் இன்னல்களையும் ஓரினமாக நின்று தாங்கிவருகிறார்கள்.

மனிதாபிமான ரீதியில் சிறீலங்காவின் சிங்கள பௌத்த அரசின் இந்த மனித உரிமை மீறல்களை நிறுத்த உலக சமுதாயம் முன்வரவேண்டும்!





### கார்த்திகை மாதம் 27...
### தமிழீழ விடுதலைப் புலிகளின்
## மாவீரர் தினம்!

இனமானம் காக்க... உயிர்த்தானஞ் செய்த
மாவீரர்களுக்காக,
நெஞ்சு வழி சொட்டும் ஓரிரு வரிகள் இதோ!

ஏட்டுப் படிப்பில் இனித்திருந்த நீங்கள்
வீட்டுப் படியிறங்கி வீதிக்கு வந்தீர்கள்!
நாட்டுக்குள் வேட்டுவரின் நாசந்தான்....
காட்டாறு போலக் கண்ணீர், குருதி கண்டீர்!

பொறுக்க மாட்டாது....

தோட்டாக்கள்... துப்பாக்கி... தூக்கிப் புறப்பட்டீர்!
ஊற்றாகி.... விடுதலைக்கு..... உரிமைக்கு
மாய்த்தீர்கள் உம்முயிரை! உணவாகி...
மாவீர மணிகளே!
நாளை புதிக்கும் நல்ல தமிழீழத்திற்....
தூறும் மழையாய்த்... தளிர்க்கும் பசுந் தளிராய்....
வீசும் காற்றாய்..... விளையும் பயிராய்....
வாழும் தமிழினத்தின் உயிரின் உயிராய்.....
உலவுவீர் சதுண்மை!
உங்கள் காலடியில்....
இதோ.... நம்நாடு மலர்கிறது!

www.tamilarangam.net

# குருதிப் பூக்கள்

## புதியகவிதைகள்

எங்கள் நிலத்தின்மீது....
அசுர வேகத்தில்....
அழிவுக்கணைகளை....
ஏவுகின்றாய் சிங்களமே!
அக்கணைகளே....
எமது விடுதலை வேட்கையின்....
புதிய ஊற்றுக்களைத்....
தோண்டிக் கொண்டிருக்கின்றன!

பட்டினியின் பாழ்விதிக்குள்
எமது பாச விளக்குகள்
அணைவதைப். பார்த்து
எமது பாதையை
மாற்றிக் கொள்வோமென்றோ
எம்மீது
உணவுத்தடை விதிக்கின்றாய்!
நிச்சயமாக
உனது எண்ணம்
நிறைவேறமாட்டாது!

எங்கள் கட்டிடங்கள்
பொடிப்பொடியாக்கப்படுகின்றன!
எமது நிலம்
இரத்தத்தினாற் கழுவப்படுகிறது!
நாளை
நமது மக்கள்
ஒரு புதிய சகாப்தத்தைக்
கட்டியெழுப்புவதற்காக!

சிறும் சிங்களமே.

நீ எம்மைப்
பிரிக்கப்பார்க்கிறாய்
நாம் ஒருபோதும்
பிரியப்போவதில்லை!

விடுதலைப் புலிகளின் செல்வாக்கில்லாது போயின், சிங்கள இனம், தமிழர்களின் சுயநிர்ணய உரிமைகளை ஒருபோதும் அங்கீகரிக்க மாட்டாது! எந்தத் தீர்வு, எப்படி வந்தாலும், தமிழீழ விடுதலைப் புலிகளின் பாதுகாப்பிலேயே தமிழீழ மக்கள் இருக்க வேண்டும்! ஈழத்தமிழர்கள் இனியும் சிங்களப் பௌத்த இனவெறியின்முன் கைகட்டி நிற்கமாட்டார்கள். வடக்கிலும் கிழக்கிலும் சிங்கள இராணுவமும், பொலிசும், காலடியெடுத்து வைக்காமலிருக்க வேண்டுமாயின், எமது மக்கள் தன்மானத்தோடும், சுய நிர்ணய உரிமைகளோடும் உயிர்வாழ வேண்டுமாயின், விடுதலைப்புலிகளின் ஆயுதங்களைக் கையளிப்பதை..... எந்தத் தமிழனும் விரும்பமாட்டான்! கிழக்கு மாகாணத்திற் சிங்களக் குடியேற்றங்களை நிறுத்தும் துணிவும், பலமும், தமிழீழ விடுதலைப் புலிகளுக்கே இருக்க முடியும்!



கடந்த நான்கு மாதங்களாக , சிங்கள அரக்கர்கள், எங்கள் தமிழ்ப் பொது மக்களுக்குச் செய்த கொடுமைகளை, இந்தப் புவியுள்ளவரை தமிழ்மக்களும் சரி , ஏனைய மனித உரிமை விரும்பிகளும் சரி, மறக்கப்போவதில்லை. சிங்கள அரசின் போக்கற்ற போராட்டத்திற்கு உதவிதர, ஐரோப்பிய நாடுகள் மறுப்புத் தெரிவித் திருப்பதாக செய்திகள் அடிபடுகின்றன.

ஏனையா இது புரியுதில்லை?
பாராளுமன்ற அமைப்பினை அத்திவாரமாக்கி வளர்ந்த ஒரு "மக்கள் விடுதலைப் போராட்டத்" தின் பரிணாம வளர்ச்சியே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டமாகும்! இராணுவத்தின் மூலம், ஓரினத்தின் அபிலாசைகளையும் விடுதலை வேட்கையையும் கொன்றுவிடமுடியாது!

www.tamilarangam.net

குருதிப்பூக்கள்

"தொடு... கதைகள்" ஒன்று

# குருதிப்பூக்கள்



'அம்மா! நோகுதம்மா!"
அந்தப் பிஞ்சுக்குரல் முனகியது!
கமலத்தின் உணர்ச்சிகள் கொதித்தன!
எப்படி... இந்தக்குழந்தையைக் காப்பாறப்போகிறேன்?'
கமலத்தின் நெஞ்சின்குரல்.... அவளை உலுப்பியது!
வீரிட்டு அலரிக்.... களைத்துப்போய் அரைகுறைத் தூக்கத்திலிருந்த
மேகலாவிற்கு.... வயது நான்குமிருக்காது!
அவளது வலக்கையின் அரைப்பாகம்.... சிதைந்து கிடந்தது!
புடவையைக் கிழித்து காயத்திற்கு கட்டுப்போட்டிருந்தாள் கமலம்!
கட்டையும் மீறி.. இரத்தம் கசிந்து கொண்டிருந்தது!
எதை நினைத்து.... ஆறுதலடைவது?
எந்த நம்பிக்கையில்.... அந்தக் குழந்தைக்கு ஆறுதல் தருவது?

அம்புலன்சு வருமா?
ஆசுப்பத்திரி.... இருக்குமா?

'அம்மா!' மேகலாவின் குரல் மீண்டும் முனகியது!
'என்ன ராசாத்தி!' தத்தளித்தது..... கமலத்தின் பேச்சு!

'அக்கா!' பிள்ளையைத் தாங்கோ!"
எங்கிருந்தோ வந்த இந்தத் தம்பி மேகலாவை
வாங்கிக் கொண்டான்!
அவளது துவக்கை.... கமலம் தூக்கிக் கொண்டாள்!

அகதிசள்... முகாமை நோக்கி..... அந்தத் தம்பி நடந்தான்
அவனைத் தொடர்ந்து கமலம் நடந்தாள்!

அவனது நடையில் ஒரு நம்பிக்கை!

இந்தநம்பிக்கைதான்.... ஓரினத்தை.... வாழவைக்கிறது!

## தொலைபேசி மாந்தர்கள்: "அலோ! அலோ!"

கமலா! இன்றைக்கு இசை விழாவிற்கு வாறாய் தானே!

இல்லையப்பா!
என்ரை மனுசனுக்கு இதுகளுக்கு வர மனமில்லையாம்!
-நாட்டில் பிரச்சனையாம் விழாவும் கொண்டாட்டமும் எதுக்கெண்டு புறுபுறுக்குது!

---

நீங்கள் இந்தமுறை கொலிடேக்கு எங்கை போறியள்?

அந்த வயித்தெரிச்சலை ஏன் கேட்கிறாய்! பிரிட்டிஸ் பாஸ்போட் வந்ததும் வராததுமாய் சிலோனுக்குப் போகப் பிளான் பண்ணினனான்!
வீணாய் ஒரு சண்டைவந்து எல்லாப் பிளானும் கெட்டுப்போச்சு!

---

மச்சான் பப்புக்கு வாறியே! நாலு பைண்ட் அடிச்சுப் போட்டு வருவம்!
பயங்கர டல்லாய்க் கிடக்கு!



சொறி மச்சான்! ஏற்கனவே மச்சுக்குப்போகப் பிளான் போட்டு விட்டன்!

www.tamilarangam.net

கிழக்கு மாகாணத்தில் ஒரு துண்டு நிலத்தைப் பறித்தெடுத்தாலும் அது தமிழீழ விடுதலைப் போராட்டத்தினை மாசுபடுத்தும்!
வடக்கிலும் ★ கிழக்கிலும்..... புலிகொடி பறக்கும் போதுதான்.... தமிழர்கள் பூரண வெற்றியை அனுபவிக்க முடியும்!

# புதுக்கவிதைகள்

## தமிழெழுத் தாணிகளே!... நீங்கள் தமிழழிப்பாணிகளே!

எங்கள் விடுதலைப்
போராட்டத்திற்குக்
குந்தகம் விளைவித்து ச்
சிங்கள ஆதிக்கத்திற்குக்
கரம் கொடுக்கும்
தமிழெழுத்தாணிகளே!
நீங்கள்
எங்கள் இனத்தின்
குருதியைத்
தொட்டுத் தொட்டு
எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்!
ஒருநாள்
தமிழர் வரலாறு
உங்கள் எழுத்தாணிகளுக்காக
அனுதாபந்தெரிவிக்கத்தான்
செய்யும்!
அப்போது....உங்கள் சந்ததி
முகத்திற்குத் திரை போட்டு நிற்கும்!

## அன்புத் தமிழகமே! ஈழத்துப் பரணி பாடிடு!

சங்கத்துப் பாடல் வரிகளைப்
பேசுவதோடு
வீரத்தின் வரலாற்றைப்
புதைத்து விட வேண்டாம்!
கண்ணெதிரே நடந்து
கொண்டிருக்கும்
வீரவிடுதலைப் போரிற்குத்
தமிழகப் படைகள்
தயாராக வேண்டும்!
அதன் பின்னர்
நாமே ....... நேரிற் கண்ட
ஒரு பரணிக்குக்
கவிதை வரிகள்
எழுதுவோம்!
கருணாகரனைக்
கலிங்கத்துப் பரணி
கண்டது!
பிரபாகரனை
ஈழத்துப் பரணி
காணட்டும்!

## "தொடு.... கதைகள்" இரண்டு



வியர்வையில்மூழ்கியது அவனது முகம்.
அவன் கண்ணோடு கண்மூடி ஆறு தினங்களுக்கு மேலாகிவிட்டன.
சிவாவின் கண்கள் இரத்தப்பழங்களாகச் சிவந்திருந்தன!

வியர்வைத்துளிகள் கண்களை எரியச் செய்தன
காளானும் குரக்கன் கஞ்சியும் கூட கைக்கெட்டாத நிலை
அந்த அகதி முகாமில் நிலவியது. அவனோடு சேர்ந்த நான்கு
இளைஞர்களும் மூன்று யுவதிகளும் அந்த முகாமைக் காப்பாற்றும் முழுப்பொறுப்பையும்
ஏற்றிருந்தனர்!

அங்கிங்கென்று ஒரு சிலர் அவர்களுக்குத் துணைதந்தனர்!
காயமுற்றவர்களை அணைத்தபடி ஊரவர்கள் தொடர்ந்து வந்துகொண்டேயிருந்தனர்!
முதலுதவியைச் செய்வதற்குக் கூட ஒரு முழுமையான சூழ்நிலை அங்கு
இருக்கவில்லை! பசிப்போராட்டம்! தாகப்போராட்டம்! தன்மானப்போராட்டம்!

அருகில் வந்த ரமணி அவனது காதுக்குள் கிசுகசுத்தான்.
'சிவா! எப்படியாவது எங்கிருந்தாவது எமக்கு உதவி கிடைக்காவிடில் இன்னும் எத்தனை நாளுக்குத்தான் சமாளிக்கப்போகிறோமோ தெரியவில்லை!"
ரமணியின் வார்த்தைகளிற் தளர்ச்சி தோன்றியது!
அவனும் உணர்ச்சிகளில் ஊஞ்சலாடும் மனிதனல்லவா?
ரமணியை உற்றுப்பார்த்தான் சிவா!
'ரமணி! நிச்சயமாக எமக்கு உதவி வரும்! வெளிநாடுகளில் வாழுகின்ற எங்கள் மக்கள் எம்மைக் கைவிடமாட்டார்கள்."
இப்படிக் கூறிவிட்டு
ஆகாயத்தை நிமிர்ந்து பார்த்தான், சிவா!
அவன் கண்களில் இருந்து தாரைதாரையாக ... நீர் வழிந்தது.

www.tamilarangam.net

# எப்படி உதவலாம்?

**NAMNAADU**
*Eluththani Publications*
*B. M. Box. 5973*
*London WC1 N3XX*

## எவ்வாறு உதவலாம்?

அங்கே இலங்கைத் தமிழ் மண்ணில் நடப்பது எங்கள் கட்டுப்பாட்டிற்கு அப்பாற் பட்டது. நாம் இங்கிருந்து கொண்டு என்ன செய்ய முடியும் என்று சிலர் அங்கலாய்க்கிறார்கள். அவர்கள் அவ்வாறு அங்கலாய்க்க வேண்டியதில்லை. மனம் உண்டானால் இடம் உண்டு என்று சொன்னவர்கள் நமது தமிழர்தானே. உதவிக்கு முதற்படியாக நாம் ஒன்றை உணரவேண்டும். சீமையில் நாங்கள் இருப்பதால் நமது சிக்கல்கள் தீர்ந்து விட்டன என்ற நினைவிலிருந்து நாங்கள் விடுபட வேண்டும். ஈராயிரம் ஆண்டுகளாக நமது தமிழினம் வாழ்ந்து வந்த இலங்கையிலே வாழ முடியாத நிலையில் இருக்கின்ற நாங்கள், இங்கிலாந்தைச் சேமமான இடமாக நினைக்கலாமா? முப்பது நாற்பது ஆண்டுகளுக்கு முன்னர் வந்ததால் தம்மை நன்றே தாபரித்துக் கொண்ட தமிழர் கூட, அப்படி நினைக்க முடியுமா? நூற்றுக்கணக்கான ஆண்டுகளாக இந்த நாட்டு ஆங்கிலேயரோடு ஒன்றறக் கலந்து விட்ட யூதர்கள் கூட தமக்கு என ஒரு சேமமான நாடு வராதா என்று இன்றும் ஏங்குகின்ற வரலாறு உண்மையை இலங்கைத் தமிழர் எண்ணாமல் இருக்க முடியுமா? இதை எமது தமிழர் விளங்கிக் கொண்டார்களானால், இன்று இலங்கையில் அவதிப்படும், அவலப்படும் தமிழர்களுக்கு எப்படி, எவ்வாறு உதவலாம் என்ற கேள்விக்கு இடமே இல்லாமற் போய்விடும். ஏன் என்றால் வடக்கும் கிழக்கும் நமது சொந்த நிலம். அந்த நிலத்தை அன்னியன் அபகரிக்கக்கூடாது என்ற உணர்வு வந்து விட்டால் அந்த நிலத்தையும், அந்த நிலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் இனத்தையும் அந்த இனத்தின் மொழியையும், அதாவது தமிழையும் பாதுகாக்க வேண்டும் என்ற ஆசை பீறிட்டெழும். உதவ வேண்டும் என்ற மனப்பான்மை உந்தியெழும்.

நிலத்தைக் காப்பாற்ற வேண்டும் என்றால் நிலப்பறிப்புக்கெதிராக இன்று எதிர்ப்புக் கொடுத்துப் போராடிக் கொண்டிருக்கும் போராளிகளுக்கு வேண்டிய சகல உதவிகளையும் நாங்கள் செய்ய வேண்டும். ஆளணியும், மறவர் படையும் தமிழ் மண்ணில் தாராளமாக உண்டு. அவர்களுக்கு இப்போது வேண்டியது பணம். உணவுக்குப் பணம் வேண்டும். உடுப்புக்குப் பணம் வேண்டும். ஊனமுற்ற போராளிகளின் சிகிச்சைக்குப் பணம் வேண்டும். போர்க்கருவிகள் பெறுவதற்குப் பணம் வேண்டும். அது மட்டுமா?

அநியாயச் சிங்கள அரசின் அட்டூழியத்தால் இலட்சக்கணக்கான தமிழ்க் குழந்தைகளும் குமர்களும் அனாதைகளாக்கப்பட்டு அனாதை மடங்களிலும் அகதி முகாங்களிலும் அனுங்கிக் கொண்டு இருக்கிறார்கள். அவர்கள்தான் நாளைய தமிழ்ச் செல்வங்கள். நாளைய தமிழ்த் தாயும் தந்தையரும் அவர்களே. பராமரிப்பாரின்மையால் அந்த இலட்சத் தமிழ்ச் சிறார்கள் இறந்தொழிந்தால், தமிழினமே அழிந்தொழிந்து விடும். ஆகவே தமிழினம் காப்பாற்றப்பட வேண்டுமானால் அந்த அனாதைக் குழந்தைகள் காப்பாற்றப்பட வேண்டும். குழந்தைச் செல்வங்களை அழித்து விட்டால், தமிழினத்தையே அழித்து விடலாம் என்பதாலேயே சிங்களச் சின்னச் சாதி, குழந்தைகள் இருக்கக்கூடிய பள்ளிக் கூடங்களிலும், பாடசாலைகளிலும், கல்லூரிகளிலும் குண்டுமழைகளைப் பொழிகின்றது. தமிழகதிகளையும், தமிழனாதைகளையும் பராமரிப்பதற்கு நாளொன்றுக்கு சராசரி எண்பத்தையாயிரம் ரூபா தேவை என்று அனாதை நிலையக் காப்பாளர்கள் அறைகூவல் விடுத்திருக்கிறார்கள். இந்த அறை கூவலுக்குச் செவிமடுத்து உதவி செய்தல் இங்கிலாந்துத் **தமிழன்** கடன்.

உங்கள் கடமை அத்துடன் நின்று விடவில்லை. இலங்கையில் இவ்வளவு இடர்களை இலங்கைத் தமிழர்க்கு இழைக்கப்பட்டும் இந்த நாட்டுப் பத்திரிகைகள், இன்று வரை உண்மை நிலை புரியாமல் இருக்கின்றன. இதற்குச் சிங்கள அரசும், இலண்டனில் இருக்கும் இலங்கையின் உயர்துதரகமும் காரணம். ஆங்கிலத்தில் ஆற்றல் மிக்க எத்தனையோ தமிழர் இங்கிருந்தும், அவர்கள் சிங்களப் பொய்ப் பிரசாரங்களை மறுதலிக்கும் வகையில் பத்திரிகைகளுக்குக் கடிதம் எழுதாமல் இருப்பது கவலைக்குரியது. தான் ஆடாவிட்டாலும் தன் தசை ஆடும் என்பார்கள். ஆனால் சொந்தச் சோதரர்கள் சிங்கள ஈனர் கையில் சித்திரவதைப் படுத்தப்படும் எங்கள் எழுத்தாற்றல் இந்த நாட்டுப் பத்திரிகைகளை நோக்கிப் பறக்கவில்லை. ஆகவே இனிமேலாகுதல் எம்மவர்கள் ஆங்கிலப் பத்திரிகைகளுக்கு எழுதி, இலங்கையரசின் கொடுமைகளை வெளியரங்குக்குக் கொண்டுவர வேண்டும்.

பேனாவின் பலம் கொண்டவர்கள் அவ்வாறு செய்யும் அதே வேளையில் இந்நாட்டில் இயங்கும் அல்லரசுத் தாபனங்களோடு நட்புக் கொண்டவர்கள், அத்தாபனங்களோடு தொடர்பு கொண்டு, உண்மை நிலையை உணர்த்த வேண்டும்.

இவற்றைத் தமிழினம் செய்ய வேண்டும். கட்டாயம் செய்யும் என்று நம்புவோம்.

*'நம்நாடு' எழுத்தாணி வெளியீட்டாளினால்.....*
*த.பெ.எண் 5973 லண்டன் WC1 N3XX எனும் விலாசத்திலிருந்து.....*
*வெளியிடப்படுகிறது!*

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்